செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சிவமயம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ௦] யாழ்ப்பாணம்- கீலக ஞு மார்கழி மீ உ௦ உ வெள்ளிக்கிழமை (3-1-1969) [இலக்கம்

# சைவக்கல்விச் சுதந்திரம் தேவை

சைவ மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் கடவுளுடைய மேன்மைகளையும் புண்ணிய பாவங்களையும் புண்ணிய பாவங்களின் பயனாகிய இன்ப துன்பங்களையும், கடவுளை வழிபடும் முறைகளையும், அவ்வழிபாட்டினாலே அடையும் முத்தி இன்பத்தையும் அறியும் அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறு மாணவர்கள் இம்மையிலேயே கற்றற்குரிய இடம் கல்லூரிகள், சர்வகலாசாலைகள் முதலியவைகளேயாம்.

சைவ சித்தாந்த அறிவும் கிரியா ஞானமும்இன்றி வரும் இக்காலத்தில் பல்கலைக் கழகம் போன்ற தாபனங்களில் அவற்றைப் பின்பற்றுவதற்கு வேண்டிய வசதிகள் அமையப் பெற்றிருக்க வேண்டும். சைவ அரசர்கள் பல்லாண்டுகளாக ஆண்ட இந்நாட்டில் — சைவம் தழைத்தோங்கி நின்ற ஈழத்தில் அன்னிய ஆட்சியில் இருந்து சுதந்திரம்பெற்ற இலங்கை மக்களுள் சைவ மக்கள் சைவத்தில் சுதந்திரம் அற்றவர்களாய் கல்வித்துறையிலும்கூடத் துன்புறுகின்றனர் என்பதை அறிந்து நாம் மிகவும் வருந்துகிறோம்.

சமயக் கல்வியில் சைவ மன்னர்கள் சிரத்தையெடுத்து வந்தார்கள். இதன்பின் அன்னிய அரசாங்கமாகிய ஆங்கிலேயர் ஆட்சியின்கீழும் சைவ சமய கலாச்சாரக் கல்வி யாதொரு இடையூறும்இன்றி வளர்ந்து வந்தது. தற்போது உள்ள ஜனநாயக ஆட்சியில் எமது சமயக் கல்விக்குரிய உரிமையை மாத்திரம் அரசாங்கம் மறுப்பது நீதியற்ற ஒரு செயலாகும்

இன்று வடமாகாணத்தின் பல பாகங்களிலும் இருந்து இங்கு திரளாகக் கூடியிருக்கும் சைவாபிமானிகள் சைவ சமய உயர்தரக் கல்வித்துறையில் ஊக்கம் செலுத்துவது முக்கிய கடனாகும். இந்த அரிய சிவத்தொண்டு இனிது நிறைவேறும் வண்ணம் எல்லாம் வல்ல கருணாநிதியாகும உமா மகேசுரரை மனம் வாக்குக் காயஙகளினால் வணங்கி ஆசீர்வதிக்கிறேன்.

சிவாகம ஞானபானு
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்
தலைவர், சைவ உயர்பீடம்.

30-12-68.

# சில கருத்துகள்

— ஒரு சிந்தனையாளர் —

(முன்வளர்ச்சி — 4)

அவர் மேலும் சொன்னதாவது:—

'அன்னத்தை அறி' என்கின்றது வேதம். அதைப்புறக்கணித்து மலத்தை உண்டு இத்தேகம் வளர்ந்திருக்கிறது என்றார். அப்பொழுது முனிவர்கள் சருகையும் காற்றையும் புசிப்பதன் இரகசியம் ஒருவாறு புலப்பட்டது

தெண்ணீரடு புற்கையாயினும் தாள்தந்தது உண்ணலின் ஊறங்கினியதில்' — வள்ளுவர்

தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
—ஔவையார்

அவர் சற்றுப் பொறுத்து மேலுஞ் சொன்னதாவது:—

உணவு மற்றோருயிர்க்கு வேதனை செய்து கிடைப்பதாயின் அது மலமே அன்றி உணவின் அதி தெய்வங்களை வேண்டிப் பெறாத வழியும் மலமே. மலமாகிய அதனை உண்டவர்க்கு ஞானம் ஏது என்றார்.

(ஊ) சீர்திருத்தம்:--

1. கடவுள், பிரவேசிக்க ஆவேசப்படுவோர்பாலும் இருக்கிறார்; தடுப்போர்பாலு மிருக்கிறார்.

(தொடர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

போற்றி யருளுகநின் னாதியாம்
பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமா
ஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந்
தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு
மீறு மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங்
காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட்
கொண்டருளும் பொன்
மலர்கள்
போற்றியா மார்கழிநீ
ராடேலோ ரெம்பாவாய்.
திருச்சிற்றம்பலம்
— மாணிக்கவாசகசுவாமிகள்

## நாவலர் நல்வாக்கு

கண்டவிடத்து முகமாத்திரம் மலரும்படி சினேகிப்பது சினேகம் அன்று; அன்பால் உள்ளமும் மலரும்படி சினேகிப்பதே சினேகம் ஆம்.

பேராதனை பல்கலைக்கழகத்தில்

## இந்து கலாசாரம்

## இந்துசமயச்சபைகள் அதிருப்தி

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பொதுக்கலைத் தகுதித் தேர்வில் இந்து கலாசாரத்தை ஒரு பாடமாகக் கற்றுச் சித்தியடைந்த மாணவர்கள் அப்பாடத்தைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து கற்பதற்குப் பல்கலைக் கழக அதிகாரிகள் இதுவரை வேண்டிய வசதிகளைச் செய்யாமையைக் குறித்து இலங்கையிலுள்ள பல இந்துசமய சங்கங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட இப்பேரவை மிகவும் அதிருப்தி யடைந்துள்ளது.

2. உடனடியாக இப்பாடத்தைக் கற்பிப்பதற்கு ஒரு தகுதியான ஆசிரியரை நியமனஞ் செய்யும்படி இப்பேரவை பேராதனைப் பல்கலைக் கழக அதிகாரிகளை விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றது.

3. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இந்துகலாசாரத்தைக் கற்பிப்பதற்குத் தேவையானால் ஒரு தகுதியான ஆசிரியரைப் பிறவூரிலிருந்தாகுதல் தருவிக்குமபடியும் குறித்த ஆசிரியருடைய பிரயாணம் விடுதி சன்மானம் முதலிய செலவுகளை உதவும்படியும் இப்பேரவை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரைக் கேட்டுக் கொள்ளுகின்றது

4. இலங்கைப் பல்கலைக் கழகப் புதுமுகப் பரீட்சைக்கு இந்து சமயத்தை ஒரு பாடமாக வைக்கும்படி இப்பேரவை கல்விப் பகுதி அதிகாரிகளைக் கேட்டுகொள்ளுகின்றது.

# சைவம் உயிர் தமிழ் உடல்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

மாணவர்கள் தாம் வழங்கும் மொழியிற் பட்டதாரிகளாதற்கும் பட்டதாரிப் பரீக்ஷைக்குச் சமயத்தை ஒரு பாடமாக எடுத்தற்கும் அரசாங்கம் வசதியளித்திருக்கின்றது. இது சுதந்திரத்தின் ஒரு பெரும் பேறு.

தமிழ் மாணவனொருவன் தமிழ் படித்தற்கு முன்வருவது பெரிய காரியம்.

அதற்கு மேலே அவன் சமயமும் படிக்க விரும்புவானாயின் அது சர்க்கரைப் பந்தரில் தேன்மாரி பொழிவதாயிருக்கும்.

சைவத் தமிழன் ஒருவன், 'சைவம் உயிர்; தமிழ் உடல், என்றே கூறுவான். நாவலர் பெருமான் சைவமுந் தமிழும் என்றே மூச்சு விட்டார்.

பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் மன்றம். சைவ சமய விருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு, பல நல்ல காரியங்கள் செய்திருக்கின்றது. மன்றம் சாதித்த சமய காரியங்களுள் மிக முக்கியமானதும் கீர்த்திபமாய் விளங்குவதுமானதொரு காரியம் திருமுருகன் திருக்கோயில், இது சமய காரியங்களின் மத்திய புள்ளியாய் விளங்குகின்றது.

திருமுருகன் திருக்கோயிலைத் தந்த பேராதனைப் பல்கலைக் கழகம் சைவத் தமிழ் மாணவருக்குச் சைவத்தைப் படிக்கக் கிடைத்த வாய்ப்பையும் பயன் செய்ய வேண்டுமென்பதே சைவ உலகின் வேண்டுகோள்.

ஒரேயொரு மாணவன் சமயம் படிக்க முன்வந்தாலும், உளம் நெகிழ்ந்து அவனுக்கு வசதி யளிப்பதே தகுதி.

இவ்விஷயத்தில் சைவ பரிபாலன சபையாரும் சைவப் பிரமுகர்களும் மற்றும் சைவ சங்கத்தவர்களும் சாந்தமான முறையில் தக்க பரிகாரஞ் செய்து, சமய மாணவர்களின் எழுச்சியை வளர்த்து அது வளம் பெறுதற்கு வகை செய்துவைப்பார்கள் என்று நம்பு வோமாக.

திருமுருகன், வருங்காலத்துப் பெரியர்களாகின்ற இளைஞர்களின் இள உள்ளத்தில், சமய பக்தியும் தமிழ்ப் பற்றும் இனிது வளரத் திருவருள் பாலிப்பானாக.

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.




மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

கீலக ஞு மார்கழி மீ ௨0-௳ வெள்ளிக்கிழமை [1968]

## இந்து கலாசாரமும் பல்கலைக் கழகமும்

—::※::—

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பொதுத்தகுதித் தேர்வில் இந்துகலாசாரத்தை ஒரு பாடமாகக் கற்றுச் சித்தியடைந்த மாணவர்கள் அப்பாடத்தைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து கற்பதற்குப் பல்கலைக் கழக அதிகாரிகள் இதுவரை வேண்டிய வசதிகளைச் செய்யவில்லை. அதற்குரிய வசதிகளை உடனடியாகச் செய்து வைக்கும்படி கல்வி யதிகாரிகளை இலங்கையிலுள்ள பல இந்து சமய சங்கங்களினது பிரதிநிதிகள் 30-12-68-ல் யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் கூட்டிய பேரவை மூலம் கேட்டிருக்கின்றார்கள். மாணவர்களைக் கடவுள் கொள்கை யுடையவர்களாகப் பயிற்ற வேண்டியது கல்வியதிகாரிகளின் கடமை. அத்தகையவர்களே எதிர்காலத்தில் அறிவு ஒழுக்கம் பண்பாடு முதலியன நிரம்பிய தலைவர்களாகத் திகழ்வார்கள். அத்தகைய தலைவர்கள் தான் நாட்டுக்கு நன்மை புரியக்கூடியவர்கள். அவர்களாலே நாட்டுக்குப் பெருமை யுண்டாகும் இலங்கையிலுள்ள நான்கு பல்கலைக் கழகங்களிலும் பௌத்த மாணவர்கள் பௌத்தகலாசாரத்தைக் கற்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்து கலாசாரத்தை இந்துமாணவர்கள் கற்க வசதிகளை பல்கலைக் கழகங்கள் தோன்றிய காலம் தொடக்கம் இதுவரை கல்வியதிகாரிகள் செய்யத் தவறியமை வருந்தக்கூடிய செயலாகும். காலஞ் சென்ற கலாநிதி திரு. சு. நடேசபிள்ளை பல்கலைக்கழக மன்றத்தில் அங்கத்தவராகக் கடமையாற்றிய காலத்தில் அவருடைய கேள்விப்படி பல்கலைக்கழக அதிகாரிகள் இந்து கலாசாரத்தை ஒருபாடமாகக் கற்பிப்பதற்கு ஒப்புக் கொண்டனரெனவும் அவர்களால் தயாரிக்கப்பட்ட இந்து சமய பாடத்திட்டமும் அங்கீகரிக்கப்பட்டதெனவும் அறிகின்றோம். இந்துகலாசாரம் இதுவரை பல்கலைக் கழகத்தில் கற்பிக்கப்படாமை வருந்தத்தக்கது. இந்து சமயத்தவர்களுடைய மனத்தில் நிலவுகின்ற இக்குறையை நீக்குவதற்கு கல்வியதிகாரிகளுக்கு இது நல்ல சந்தர்ப்பமாகும்.

இந்துகலாசாரத்தைப் பல்கலைக்கழகத்தில் கற்பிப்பதற்குத் தகுதியான ஆசிரியரைப் பல்கலைக் கழக அதிகாரிகள் உடனடியாக ஒழுங்கு செய்வார்களாக அங்ஙனம் தகுதியான ஓர் ஆசிரியரை இந்நாட்டில் பெறுதல் கஷ்டமாக விருந்தால் இப்பிரசுரத்தில் பிறிதோரிடத்தில் காட்டியபடி வெளியூரிலிருந்து ஒருவரை வருவித்து இக்குறை நீக்கிக் கொள்ளலாம். அதற்கு வேண்டிய உதவிகளை செய்து கொடுக்கும்படி முன்னர் கூறப்பட்ட பேரவை யாழ்ப்பாணம சைவபரிபாலன சபையைக் கேட்டிருக்கின்றது. பல்கலைக்கழக அதிகாரிகள் குறித்த பேரவையினுடைய கோரிக்கையை நிறைவேற்றுவார்களாக.

x x x

## தெய்வ நிந்தனை

யாழ்ப்பாணம் தூய ஜேம்ஸ் ஆலயத்தில் நத்தார் இரவு வழிபாடு நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் போலிஸ் படையினர் ஆலயத்திற்குள் நுழைந்து ஆங்கு குழுமியிருந்த பக்தர்களைத் தாக்கினர்; வணக்கத்துக்குரிய குருவானவரையும் தாக்கினர்; ஆலயத் தளபாடங்களையும்சேதமடையச் செய்தனர். பொலிஸபடையினருடைய கொடியசெயலினுல் ஆலயவழிபாடு சீர்குலைந்தது. மக்கள் அச்சத்தினுல் வெளியேறினர். இக்கலவரத்துக்குக் காரணம் இச்சம்பவம் நிகழுமுன் ஆலயத்தினருகாமையில் ஒரு பொலிஸ் அதிகாரி பிரயாணஞ் செய்த ஜீப்வண்டி சனக் கூட்டத்துக் கூடாகச் செல்லும்பொழுது அவர்களுக்கு இடைஞ்சலை உண்டு பண்ணிவிட்டதினுல் அவர்கள் பொலிஸ் அதிகாரியையும் சாரதியையும் தாக்கினமையேயாகும். ஜீப்வண்டியும் குடைசாய்ந்து விட்டது. காயமடைந்த பொலிஸ் அதிகாரியும் சாரதியும் பொலிஸ் நிலையத்தில் நிகழ்ந்ததைக் கூறவே பொலிஸ்காரர் படையெடுத்து ஆலயத்தையடைந்து முற்குறித்த நியாயமற்ற செயலைப் புரிந்தனர்.

பொலிஸ் அதிகாரிகள் நாட்டில் சமாதானத்தையும் அமைதியையும் பாதுகாக்கும் பொறுப்புடையவர். வேலி பயிரை மேய்ந்த தன்மையாக அவர்கள் பொறுமை யிழந்து இங்ஙனம் நடந்து கொள்வது மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும். இப்படி மிருகத்தனமாக ஒரு ஆலயத்தில் நடந்துகொண்டமை பெருந் தவருகும. கடவுள் வழிபாட்டினுல் மக்கள் மிருகத்தன்மை நீங்கிக்கொள்வார்கள். அப்படியாய தூயசெயலில் ஈடுபட்டிருக்கும் மக்களை பொலிஸ் அதிகாரிகள் தாக்கினமை அறமல்ல; குருவானவர் தாக்கப்பட்டமை மிகப் பாரதூரமான குற்றமாகும்.

இந்த நிகழ்ச்சி நமது நாட்டுக்குப் பெரும் இழிவைஉண்டாக்கி விட்டது. பொலிஸ்பகுதியின் மேலதிகாரிகள் உடனடியாக விசாரணைசெய்து தண்டனை விதிக்க நடவடிக்கையெடுத்து வருகின்றார்கள். இப்படியான தெய்வ நிந்தனைச் செயல்கள் நமதுநாட்டில் இனிஎன்றும் நடைபெருமல் காப்பது அரசினரின் அதிமுக்கிய கடமைகளுளொன்ருகும்.

## சில கருத்துகள்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

கடவுள் கருத்தை யாரும் விசாரித்ததுண்டா?

2. கைலை மலைக்கீழ் இராவணன் நெரியுண்டான்; நெரித்தவர் சர்வ சீல தயாபரர். அவர் கருத்தறியாது வாகீசமுனிவர் இரங்கி, இராவணன் உயிர் பிழைக்கப் புத்தி சொன்னர். அது சங்கிதி விரோதமாய், வாகீசர், திருநாவுக்கரசராய்ப் பிறக்க நேர்ந்தது.

'அரன்றன் பாதம் மறந்து செய்யறங்க ளெல்லாம் வீண் செயல்' சித்தியார்.

3. உனக்குப் பிறர்க்கு நன்மை செய்யத் தெரியுமா? என்று வினவுகிருர் டால்ஸ்டாய்.

பிறர் இருக்கட்டும். எனக்கு நன்மை எது என்பது எனக்குத் தெரியவில்லையே என்கிருர் மணிவாசகர். வேண்டத் தக்க தறிவோய்நீ' -திருவாசகம்.

"என்னிலும் இனியான் ஒருவன் உளன்" திருநாவுக்கரசர் வாக்கு.

4 நன்மை செய்யத் தம்மை அர்ப்பணித்த மகாத்மாவை ஒரு பாவி சுட்டான். சமபந்தரை அவ்வாறு சுட முடியுமா? அவர் தங்கிய வீட்டைச் சுட மூனைந்தவர்பாடு எப்படி முடிந்தது?

5. சீர்திருத்தக்காரர்தாம் செய்வது நன்மைதானு என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

'அதிக நன்மையும் ஆபத்தானது' என்ருர் பேனுட்சோ. அதனை மகாத்மாவே ஏற்றுக் கொள்ளார். ஆத்திசூடி கேட்டுச் சிரிக்கும். நன்மைக்குத் தீமை பயனுகாது. தீமை பயனுயின் நாம் நன்மை என்று வைத்ததில் தவறு காணப்படும்.

(ஊ) சாத்திரக் கருத்துகள் :

1. சாத்திரவிதி பேசுவதானுல், உள்ளே நிற்பவர்கள் அனைவரும் வெளியேற வேண்டி வரும், அது நீதி.

சைவத்துக்கு ஆதாரமான நீதி நெறியாகிய வைதிகத்தில் நிற்பார் நிற்கத் தக்கார் ஒருவரைக் காண்டல் அரிதினும் அரிது.

உள்ளே நிற்பவர் வெளியேறிய பின், சாத்திரம் வல்ல சாதகர் ஒருவரிடம் அடையாள அட்டை (தீக்ஷை) பெற்று உட் பிரவேசித்தற்குரியார் உட் பிரவேசிப்பதே நீதி. இது கலியில் நடக்குமா?

இந்த நீதியைச் செய்தால், வெளியே நிற்பவர்கள் கண்மூடி மௌனிகளாய்ச் சும்மா இருந்து சிந்திப்பர். அவர்கள் தலையிலும் மனசிலும் ஒரு சுமையும் இராது.

2. சாத்திர விசாரம்: சாத்திரங்கள் கடவுள் அருள் பெற்ற முனிவர் வழிவந்தவை, வேதங்கள் ஆகமங்கள் ஸ்மிருதிகள் புராணங்கள் முதலியவைகளுககு இக்காலத்தார் கருத்துச் சொல்வதை முனிவர்கள் கேட்டுச் சிரிப்பார்கள். அவை நம் சிற்றறிவுக்கு எட்டாதவை.

வேதத்தில் முழுகிய அரவிந்தர், சாயனர் முதலிய வியாக்கியான கர்த்தர்களை ஒப்புக் கொள்ளவில்லை உரைகளையும் மூலங்களையும் வேறு வேருகப் படிக்குக என்ருர் பேரறிஞர் ஒருவர்.

நற் பெண்டாட்டிக்கு ஒருவார்த்தை;
அல்லாதவர்களுக்கு உலக்கையடி யாலும் பயனில்லை என்பது பழமொழி.

ஒரு குற்றத்தைப் புலையன் செய்தால் சூட்டுக்கோலாற் சுடுக; அதைப்பிராமணன் செய்தால் ஒருபணம் குற்றம் இடுக என்று மநு சொன்னுல், அது இக்காலச் சனநாயகத்துக்கு விளங்குமா?

மநு, 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' சொன்னுர் என்று படுந்தானே.

3. இக்கால சாத்திர ஆராய்ச்சி வெறும் மண் சோறுகறி.

கால வெள்ளத்தில் மிதந்துவருங் கருத்துக்களைச் சாத்திரத்திற் காண முயல்வது ஒரு வியாதி; அதுகலி கால நோய்.

( தொடர்ச்சி 3. ஆம் பக்கம் )

### நாவலர் நல்வாக்கு

தரித்திரனுய் இருக்கும் போது திருத்தி அடையாதவன், செல்வனுய போதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக் குற்றமே அன்றிப் பொருட் குற்றம் அன்று. ——

## ஸ்ரீ ஜெயப் பிரகாஷ் நாராயணன்

பாரத நாட்டுச் சர்வோதய இயக்கத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் காந்தி நூற்றுண்டு விழாவில் கலந்துகொள்வதற்காக 2-1-69 வியாழக்கிழமை இங்கு வந்து சேர்ந்தனர். காந்தி நூற்றுண்டு விழாத் தலைவர் செனேட்டர் ஏ. ரத்நாயகா, திருவாளர்கள் டி. பி. ஏ. எல்லப்பொல, கே. ஆழ்வாப்பிள்ளை, கே. வி. தங்கராசா, ஈ. டபுள்யூ. கனகரத்தினம் முதலியவர்கள் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர். இப் பெரியார் விநோபாவன் சீடராவர். இந்திய மக்களுடைய வறுமையைப் போக்குவதற்குச் சர்வோதய இயககததின் மூலம் தொண்டாற்றி வருகின்றனர். சிறந்த சிந்தனையாளன். பாரத நாட்டின் விடுதலைக்காக மகாத்மா காந்தியுடன் உழைத்தவர். சுதந்திரப் போரிலீடுபட்டிருந்த காலத்தில் சிறைத் தண்டனையும் பெற்றவர். அவருடைய வருகை நல்வரவாகுக.

அவர் 8-1-69 இரவு 10 மணியளவில் உருத்திரபுரம் காந்திநிலையத்துக்குச் செல்வர். 9-1-69 காலை 9 மணியளவில் அக்கராயன் குளததிலுள்ள கொணுவில் என்ற இடத்தில் "காந்திக் கிராமம்" திட்டத்துக்கும் மு. ப. 10 மணிக்கு தருமபுரத்தில் கஸ்தூரிபாய் இல்லத்திற்கும் பி.ப 12-30 மணிககு அன்னுரின் ஈழ நாட்டு விஜய ஞாபகார்த்தமாக அமைககப்படவிருக்கும் "ஜெயப் பிரகாஸ்" இல்லத்துககும் அடிக்கற்கள் நாட்டுவார்.

அன்று பிற்பகல் 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளுவார்.

### புற்றுநோய்ப் பிரசாரம்

வடபகுதியில் உள்ள உயர்தர பாடசாலைகளிலே புற்றுநோய் பற்றிப் பிரசாரம் புரிவதென்றும் ஷ நோய் சம்பந்தப்பட்ட துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதென்றும் யாழ்மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கத்தினர் தீர்மானம் செய்துள்ளனர்.

### யாழ் மேயர் தேர்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதியமேயர்தெரிவு இம்மாதம் 13ம் ௳ புதியகொமிஷனர் திரு. ஏ. ரி. சுந்தரத்தினுல் நடத்தப்பெறும்.

## சில கருத்துகள்
[2-ம் பக்கத் தொடர்ச்சி]

திருக்குறள் ஆராய்ச்சிக்குத் தமிழ் நாடு 9 இலட்சம் ரூபா ஒதுக்கியது. இக்காலக் கருத்தைக் குறளில் ஏற்றிச் சொல்ல என்கிறார் ஒருவர்.

4. சாத்திரக் கருத்துக்கள் குரு பரம்பரையில் வரவேண்டியவை. சாத்திரங்கள் எழுத்தில் வந்ததே தவறு என்பாருமுளர்.

எ. மிலேச்சப் போக்கு:-

ஞானசாத்திரத்தை அதுவல்லளவரிடமுங் கேட்கலாம்; உலகசாத்திரத்தை உயர்ந்தோர், தாழ்ந்தோரிடம் கேட்கலாகாது என்பது ஒருவிதி

ஞானம் வல்லோர் இனப்புத்தி போனவர். அவரிடம் யாரும் படிக்கலாம்.

உலக சாத்திரம் வல்லோர் இன்ப்புத்தி போகாதவர். அவரிடம் படித்தால் அவர்புத்தி படிப்போரிடம் பாடத்தோடு பாடமாய்ப் படிந்து விடும்.

இராமன் வில்வித்தையை வசிட்டரிடம் படித்தான்; அனுக்குண்டுக்காரனிடம் படிக்கவில்லை.

அதனால் கிராயுதபாணிமுன் வில்லைத்தளர்த்தினன்.

இந்தியாவை மிலேச்சர்கள் ஆண்டதனல் வந்த மிலேச்ச எண்ணங்கள் எண்ணிறந்தன.

உதாரணத்துக்கு ஒன்று.

ஆரிய திராவிடச் சண்டை மிலேச்சக் கல்விப் பேறு; மிஷனரிபாதிரிகள் சூழ்ச்சி. ஆரியம் தமிழ்கருத் தொருமித்த இருபாஷைகள். பாஷைகளாற் சாதி வருவதில்லை. 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்.' தேவாரம். மனிதன் ஆரியனாய்த் தமிழனாதல் வேண்டும். அறிவனாய் அன்பனாதல் என்பது கருத்து.

ஐ 1. சமய சீர் திருத்தத்துக்குச் சட்டம் செய்யும்படி, மற்றொருமத அரசைக்கேட்பது, தன்கழுத்தில் தானே சுருக்கிடுவதாம்.

2. சமயகுரு அரசரிற் பெரியர்; அரசனும் வணங்கும் பெருமையுடையர் அவரே, காலதேசவர்த்தமானங்களை நோக்கி விதிவகுக்கும் அதிகாரம் படைத்தவர்.

3. உண்டிருந்து வாழ்வதற்கு உறுதுணையாக, சமயகாரியங்களில் தலையிடுவது சமய விரோதம்.

(வளரும்)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்


வேலுப்பிள்ளை வீரசிங்கம் காங்கேசன்துறை
வழக்கு இல. M B 9264 —வழக்காளி

எதிராக

செல்லையா நடராசா காங்கேசன்துறை —எதிராளி

யாழ்ப்பாணம்டிஸ்திறிக் கோட்டின் M. B. 9264-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி, 1969-ம் ஞூ தை மீ 13 உ திங்கட்கிழமை முற்பகல் 10-30மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 3546/25ம் 24-7-67 தொடக்கம் 5-12-67 வரைக்கும் ரூபாய் 2750 -க்கு 9 வீதவட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 355/16

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோயிற் பற்று பளை இறை "இம்பிலிசிட்டி" நில. பர. 2. செம்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு ஆறுமுகம் சந்தையாவுக்கும் பெண் நாகேஸ்வரிக்கும் மேற்கு வேலாயுதம் பெண் குணமணிக்கும் தெற்கு விஜயசிங்கத்தின் பெண் சின்னத்தங்கத்தின் ஆதனம். இதுமுழுவதிற்கும் தென்மேற்குப் பக்கமாய் இருக்கும் கிணற்றில் பங்கும் மேற்குப் பக்கமாக வழிவாய்க்காலும் உண்டு.

19 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.

சு. கந்தசாமி
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம்329 3—1—69


---

## தேவார திருவாசகப்
# பண் வகுப்பு

காஞ்சிபுரம் மெய்கண்டாராதீன வித்துவான் தேவார இன்னிசைச் செல்வர் திரு P. A. S ராஜசேகரன் அவர்கள் தென்மராட்சியிலுள்ள சைவ மாணவர்கள் மாணவிகள் சைவாசிரியர்கள் சைவாசிரியைகள் முதலியோர் சைவத் திருமுறைகளைப் பண்ணிசையுடன் ஓதும் பயிற்சியைப் பெறுவதற்காகச் சாவகச்சேரி றிபேக்ஸ் கல்லூரி மண்டபத்தில் 20-1-69 திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்குத் தொடங்குவார்கள். வகுப்புக்கள் பெண்களுக்கும் ஆண்களுக்கும் வெவ்வேறாக நிறுவப்படும். வகுப்புத் தொடர்ந்து நடைபெறும். திகதிகள் வகுப்பு ஆரம்பிக்கும் தினத்திலேயே தெரிவிக்கப்படும்.

வடமாநில வித்தியாபதி திரு. S தணிகாசலம் அவர்கள் சமூகமளித்து ஆசியுரை வழங்குவார்கள். (ந.நி)

---

நேயர்கள் நெஞ்சம்

## கீலகவருட மழைப்பலன்

இவ் வருடம் கீழ்க் கண்டபடி வாக்கியம், திருக்கணிதம், என்னும் இரு பஞ்சாங்கங்களிலும் மழைப் பலன்கள் காணப்படுகின்றன.

திருக்கணிதம் :- 10 பங்கு மழையில் இரு பங்கு பூமியிலுமாகப் பொழியும். ஆதலால் இவ் வருடம் பூமியில் நல்ல மழை பெய்து பயிர்ச் செழிப்புண்டாம்.

வாக்கியம்:—

| | | |
|---|---|---|
| இராசா | ... ... .... .... ....... | நன் மழை |
| சேனாதிபதி | ... ... .... ... ... ... | நன் மழை |
| | சுக்கிரன் | |
| அர்க்காதிபதி | ... ... ... ... .... ... | மழை மிகுதி |
| மேகாதிபதி | ... ... ... .... ... .... | நன் மழை |

இரசாதிபதி — வியாழன் — மழை மிகுதி
மேகம் தமம் பலன் — அதிக மழை வருஷித்தல்
மழை மரக்கால் நாலின் பலன் — அதிக மழை

அவ்வவ் மாதங்களுக்குக் குறிக்கப்பட்ட பலன்

சித்திரை — மழைக் குறைவு — ஆனல் நல்ல மழைபெய்தது
வைகாசி — மத்திம மழை — மழையே இல்லை
ஆனி — சம மழை — மழையில்லை
ஆடி — அற்ப மழை — மழையில்லை [தூறல்.
ஆவணி — மழை மிகுதி — பூமியில் நான்கு அங்குலம்வரை ஊறின
புரட்டாதி — அதிக மழை — விதைப்புக்குரிய மழைபெய்தது.
ஐப்பசி — மழை மிகுதி — தூறல்.
கார்த்திகை — நன் மழை — தூறல்.

மேற் காட்டப்பட்ட பலன்களின்படி நல்ல மழை பெய்திருக்கவேண்டியது. பொதுவாக யாழ்ப்பாணத்தில் உள்ள வயல்களில் வெள்ளமே இல்லை. தூறலினால் புல் வளர்ந்து நெல்லை மூடி உங்களுக்கு இங்கே இடமில்லையென்று ஆக்கிரமித்துக் கொண்டது. கார்த்திகை கடந்து மார்கழியும் முடியும் தறுவாயில் இருக்கிறது.

கமஞ் செய்வோர் தண்ணீர் இல்லாமல் களை பிடுங்க முடியாது திண்டாடுகிறார்கள். ஒரு கொடியொன்று ஞாபகத்திற்கு வருகிறது. அப்பர் ஒரு கிணறு வெட்டி அதில் ஊறின நீர் குளிக்கப் போதுமாயிருந்தது. ஆனல் குடிக்கப் பற்றாதிருந்தது. (வியர்வை) இதே மாதிரியாகத்தான் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பொழிந்த மழை.

கன்னியில் செவ்வாய் கடலும் வற்றும் என்பது ஓர் பரம்பரையான முதுமொழி. இதைப் பஞ்சாங்ககாரர் அறியார்போலும். இதை அறிந்தால் கட்டாயம் பஞ்சாங்கத்தில் காண்பிக்க வேண்டியது. இச் செவ்வாய் ஐப்பசி 15-ஆம் திகதி முதல் மார்கழி 8-ஆம் திகதி வரை கன்னியில் சஞ்சரிப்பார். பூவுலகில் கையாளும் முறை தேவலோகத்தாருக்குத் தெரியாததல்ல. செவ்வாய், வெற்றோ (Veto) என்ற அதிகாரத்தைக் கையாண்டு மழைப் பலனை இரத்தாக்கி இருக்கின்றாரோ?

சிவசம்புப் புலவரில்லம், உடுப்பிட்டி.

இங்ஙனம்,
மு. காங்கேசு

---


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

கொம்பனி லிட்.

(ஸ்தாபிதம் 1918)

10,000-00 பங்குகள் ரூபா 5 விகிதமான 50,000-00

மாதாந்த சேமம் கட்டும் முறை.

மாசமொன்றுக்கு ரூபா 10-00 விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டுப் பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக் கொடுக்கப்படும். ரூபா 100-00 விகிதமாகக் கட்டினல் ரூபா 10,000-00 கொடுக்கப்படும்.

சேமிப்பு பற்றுவரவு எச்சநிதி.

ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வீத வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேமம்.

சேமப்பணம் முறையே, 12, 24, 36, என்னும் மாச காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9. விதமாகக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம். — மனேஜர்


---

## சிந்தனை வருமா....?



பக்தர்: "சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்தவரலாற்றை நினைவுபடுத்தும் 'பிட்டுத் திருவிழா" வைக் கொண்டாடுகின்றோம்; —மண் சுமத்தலை மறந்துவிட்டோம் — பிட்டுத் திருவிழாவன்றும் — என்றும் வீதிகள் அமைத்தல்; குளங்களைத் திருத்துதல் போன்ற நற்பணிகளில் நா முழைக்கவேண்டும்" அப்பிடீன்னு காந்தி அடிகள் நூற்றாண்டுவிழாவில் கலந்து (ஈழத்தில்) உரைநிகழ்த்தும்போது, தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் குறிப்பிட்டார்களாம்! இந்த உண்மையைச்சிந்தித்தால்....!

சித்தர்: "...சிந்தித்தால்,எங்கள் திருக்கோயிற்குளங்கள்—தீர்த்தக்கிணறுகள் — திருமதிற் சுவர்கள், கோபுரங்கள், திருவீதிகள் இப்படியாகிடக்கும்? சுவாமிகள் உண்மையைக் கூறியிருக்கிறார்கள்; ஆலயநிர்வாகிகளும், அபிமானிகள் அத்தனைபேரும் —சிந்திக்க வேண்டும்; சிந்தனைவருமா?

—"நாயன்மார் - நாதன்"

---


### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் கல்லூரி வீதி இல. 37.
1. இராமலிங்கம் நடராசா
2. பெண் கமலாதேவி.
—வழக்காளிகள்
இல. M. B. 8435

எதிராக

யாழ்ப்பாணம் அரசடி வீதி 196/8
1. ஆறுமுகம். மார்க்கண்டு
2. பெண் பாக்கியம்
3. வெள்ளையன் கந்தையா பெண் சின்னாச்சி
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 8435-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1969ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 29-ம் திகதி (29-1-69) புதன்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் முறையே அந்தக்காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை-- முதல் வட்டி ரூபாய் 4875-ம் இதின் ரூபாய் 3000-க்கு 7-9-66 திகதி தொடக்கம் 3-7-67 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 343-10 சதம்

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை வடகிழக்கிறை 'நீர்கொச்சியடியும் கட்டைக்காடும்" நிலப்பரப்பு 2-ம் குழி 5-ம் இதில் நிரந்தரமாக நிலப்பரப்பு ஒன்று (1-ப) வீடும் பயிர்களும் வடக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிற் பங்கும் வடக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லை பருவாக வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு வயிரவி தம்பிமுத்துவின் ஆதனம் மேற்கு வேறு முருகேசுவுக்கும் பி. மாணிக்கத்திற்குமுரிய ஆதனம் தெற்கு சுறுவல் கந்தையாவின் ஆதனம். இடம் சுறும். முற்பதிவு D 284/78

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 13-12-1968
எம், 380, 10-1-69

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காரைநகர் மேற்கு வயிரமுத்துப்பிள்ளைகைம்பெண் தங்கம்மா தனக்காகவும் டிலூர் காலஞ்சென்ற எஸ்.எம் வயிரமுத்துப்பிள்ளையின் ஆதனங்களின் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டுத் தத்துவ வழக்கு இல, 1447. T வ, தத்துவகாரியாகவும்.

இல. M. B. 9076 எதிராக -வழக்காளி,

1. காரைநகர் மேற்கு வேலுப்பிள்ளை குமாரசுவாமி.
2. டிலூர் பெண் மாரிமுத்து.
3. டிலூர் கந்தர் வேலுப்பிள்ளை கைம் பெண் சின்னாச்சிப்பிள்ளை, 1ம்-எதிராளி தற் பொழுது, இல -252A ,ஆப்புவளிபுரம், திருகோணமலை —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B/9076ம். இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி என்னால் 1969ம்-ஆல் தை மீ 29-ம் திகதி புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா: 5433/33 சதமும் ரூபா: 5000/ —க்கு 12.5.1967 தொடக்கம் 17—2—68 வரை 8 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 524/56 சதம். கோட்டுச் செலவில் ரூபா:150/—கோட்டில் கட்டப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு மேற்கிறை''வியாவில் ''பர-நீ.இல 16-இதில் தெற்கும் பக்கமாகப் பர-நீ- இல, ஒன்று நீக்கி மிகுதி பர.நீ.இல்'லதினைந்து (பர.நி இல.15) வான்பயிர் செய்பயிர்களும். வீடும்,கிணறும் எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு மயில்வாகனம் பெண் சிவபோகத்திற்குரிய ஆதனம் மேற்கு ஆறுமுகம் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும், மறுபேருக்கும்-நாகேசு கணேசபிள்ளைக்கும்,பொன்னையா பெண் முத்துப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும். இதன்பதிவு— C 344/277. இது C 386/171 க்கு போகப்பட்டுள்ளது.

காரைநகர், 1968-ம் ஆல் — வை. ஏரம்பமூர்த்தி
மார்கழி மீ 7 ம் திகதி — கொம்மிஷனரும் ஏலவிற்பனையாளரும்
எம், 324. 3-1-69.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய் வடக்கு சின்னத்தம்பி சண்முகமும் பெண் சிவக்கொழுந்துவும் வழக்காளிகள்.

இல. M. B. 8361 எதிராக

கோப்பாய் வடக்கு ஆசைப்பர் ஆசிர்வாதமும் பெண் அரியம்மாவும்.(காலஞ்சென்று போனார்.)

யாழ்ப்பாணம்டிஸ்திறிக் கோட்டின்M B 8361- ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி,பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1969-ம் ஆ தைமீ 24உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 5904/— ம் 1-8-66 தொடக்கம் 3- 3 , 67 வரைக்கும் ரூபாய் 5500/—க்கு 8% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 321-00. இவ் முதல் வட்டி ரூபாவில் ரூபா 500/- கொடுபட்டிருக்கிறது. அத்துடன் செலவு தொகையில் ரூபா 150/— கொடுபட்டிருக்கிறது.

### காணி விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற் பற்று கோப்பாய் தெற்கு இறை ''முகப்பனை'' பரப்பு நிலம் 10. (பத்து) இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை.வடக்கு ஆசைப்பர் வேதநாயகத்துக்கும் பெண் அன்னம்மாவுக்கும் உரியஆதனம். மேற்கு ஆறுமுகம் பெண் தங்கம்மாவுக்கும் மற்றவருக்கும் உரிய ஆதனம் தெற்கு ஒழுங்கையும், நாகேஸ்வரியின் ஆதனமும், வட எல்லை காணியில் இருக்கும் கிணறு, துலா, ஆடுகால், வழி. வாய்க்காலில் பங்கும்.

பதிவு இலக்கம் K 245/203.

16, A அம்மன் ரோட், — அ. ஜெகநாதன்,
கந்தர்மடம், — கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
16-12-68. — எம். 326 3—1—69

---

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 3—1—1969 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல. M. B 7696

சவரிமுத்து செபஸ்தியாம்பிள்ளை மத்தியகிழக்கு ஜெக்கிள மசம் ரோட், யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

பாவிலுப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை மூளாய் ரோட், கண்டுக்குழி. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B, 7696-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1969-ம் ஆல் (18-1-69) ஜனவரி மீ 18-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 2920/—ம்21-9-66 தொடக்கம் 1-6-67 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 319-83 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் சுண்டிக்குழிகோயிற்பற்று சுண்டிக்குழி 'சோனைகைப் பெரியவளவு' பரப்பு கிலலாச்சம் 4ம் வீடும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு மூடியப்பு மரியாம்பிள்ளையின் உரிமைக் காரருக்குரிய ஆதனம் வடக்கு அந்திரேசு செபாமாலைக் குரிய ஆதனம் மேற்கு வைத்திலிங்கத்துக்குரிய ஆதனம் தெற்கு ரோட்டு

சி. சே மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
''விதானை வளவு''
சித்தன்கேணி 13-11 68
எம். 323 3-1-69

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
இலக்கம் M. B. 9048

கொழும்புத்துறை யாழ்ப்பாணம் இராமலிங்கம் செல்வராஜா —வழக்காளி

எதிராக

கொட்டடி யாழ்ப்பாணம் அம்பலவாணர் மாரிமுத்து கைம் பெண் ருசம்மா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 9048-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு காணி 1969-ம் ஆல் தை மீ 27-ம் (27-1-69) முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 8594- இன்னும் ரூபா 5000- த்துக்கு 4-5-67 தொடக்கம் 13-6-68 வரைக்கும் 10% வட்டியும் அதன்மேல் முழுத தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 333-41-ம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வண்ணார்பண்ணை தென்மேற்கு வண்ணார் பண்ணை கோயிற்பற்று ''பல்லு விளிதோட்டம்'' பர- கில இலா 8-4 குழி கல்வீடும், கிணறும் செய்பயிர் வான்பயிர்களுடனும் அதைச் சேர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு ஆறுமுகம் கைம் பெண் இரத்தினத் தினைதனம் வடக்கு நவரெத்தினத்தின் பெண் விதுலஷ்சுமி யினுதனம் மேற்கு நமசிவாயம் கைம் பெண் செல்லாச்சியினுதனம் தெற்கு ரோட்டு. இதடங்கலில் பிரிபடாத ½பங்கு

செ. விசாகரெத்தினம்
கொம்மிஷனர்&விலைமதிப்பாளர்.
133 பருத்தித்துறை ரோட்டு.
நல்லூர், யாழ்ப்பாணம்,
29-12-68,
எம் 328 3-1-69

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சரவணமுத்து முத்தையா, 208/1 பிரதானவீதி யாழ்ப்பாணம். வழக்காளி.

இல: MB 9106 எதிராக

1. ஆறுமுகம் வேலுப்பிள்ளையும் பெண்
2. சிவபாலசரஸ்வதி C/o S. N கந்தையா, ஆசிரியர், சிறுப்பிட்டி வடக்கு, சிறுப்பிட்டி எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 9106-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1969-ம் ஆல் தை மாதம் 15-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 5,616/66 சதம் 25-5-67 தொடக்கம் 2-12-67 வரைக்கும் ரூபா 4,000-க்கு 11% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 150- கொமிஷன் செலவு ரூபா 12- தீர்வைத் திகதிக்குப் பின் கொடுக்கப்பட்ட ரூபா 3,000- குறைய- .

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று, சிறுப்பிட்டி இறை 'கிருலி' இதன் நெற்பரப்பு ஐந்து (5) இவ்வாதனம் வடக்குப் பக்கமாய் நெற்பரப்பு 10½ல் இருந்து பிரிக்கப்பட்டது. வடக்குப் பக்கமாய் பிரிக்கப்பட்ட நெற்பரப்பு 5ம் வீடும், கிணறும் செய்பயிர் வான்பயிர் வகைகளும் இவ்வாதனம் யாழ்ப்பாணம், உத்தரவு பெற்ற கவுண்தர T. சின்னத்துரை அவர்களால் தயாரிக்கப்பட்ட படம் இலக்கம் 603ல் காட்டப்பட்டுள்ளது இதன் எல்லை கிழக்கு ரோட்டு. வடக்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்திற்கும் சிவகாமி அம்மன் கோவில் ஆதனங்களும். மேற்கு அருணசலம் செல்வராசாவுக்கும் மறுபேர்களுக்கு முரிய ஆதனம், தெற்கு நாகமுத்து கந்தையாவுக்கும் அவரின் மனைவிக்கு முரிய மீதி ஆதனம்

வே. கோபாலபிள்ளை,
22. ஆஸ்பத்திரி வீதி, — கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 18-11-63 — எம் 327 3—1—69

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அச்சுவேலி தெற்கு சரவணமுத்து மருதலிக்கமும் பெண் சின்னத்தங்கச்சியும் வழக்காளிகள்.

வழ இல M B 9360 எதிராக

அச்சுவேலி தெற்கு நாகலிங்கம் இராசதுரை —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9360 -ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1969.ம் ஆல் மாசி மீ 3 -ந் உ திங்கட்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிகளுககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1188-66-ம் 24-8-67 தொடக்கம் 10-2-68 வரைக்கும் ரூபாய் 750/ - க்கு 8%வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 203-96 சதமும்,

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலி கோயிற்பற்று அச்சுவேலி தெற்கு இறை 'முதலைககலட்டி'' குழி 14½ ம் வீடும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு இரண்டு கியூபீற் அகல பாதை. வடக்கு வேலுப்பிள்ளை விசுவலிங்கத்தின் ஆதனம், மேற்கு கதிரிப்பிள்ளை செல்லையாவின் ஆதனம். தெற்கு இக காணியில் இருந்து விடப்பட்ட ஒழுங்கை பதிவு இல 211/12.

2, டிை''முதலைக்கலட்டி', பர.கில.இலா 37ம், 17, 10/32 குழியும். இதில் லொட் 2 பர. கில. இலா 13 ம் குழி 68/32. குழியும் இதில் மேற்குப் பககமாக பரப்பு ஒன்றும் குழி 11 ம். இதில் வடக்குப் பக்கமாக 13½ குழி. இதற்கு எல்லை கிழக்கு ஆள்வான் சின்னவன் முருகனின் ஆதனம். வடக்கு கணபதிப்பிள்ளை கதிர்காமசேகரத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு கதிரிப்பிள்ளை செல்லையாவின் ஆதனம், தெற்கு நாகலிங்கம் இராசதுரைக்குரிய ஆதனமும் பாதைமுகப்பும். தெற்கு எல்லைக் காணியில் இருந்து கிழககுப் பக்கமாக இரண்டு கியூபீற் அகலமானபாதை உட்பட,இதடங்கலும், பதிவு இல. K 217/95.

16 A அம்மன்ரோட் — அ ஜெகநாதன்.
கந்தர்மடம், யாழ்ப்பாணம். — கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.

---

உ
படித்துவிட்டீர்களா ....?
சைவபரிபாலனசபை வெளியீடு

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
எழுதிய

''நாவலர்''

விலை: ரூபா 1-00

தொகையாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மனேஜர்,
சைவப்பிரகாசஅச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்

### பிழை திருத்தம்

அதை ஆப்படி வாசிக்கவும்

20-12-68 இந்துசாதன இதழில் M. B. 9370-ம இலக்க கோட்டு விற்பனவு விளம்பரத்தில் விற்பனவுத் திகதி 1968-ம் ஆல் தை மீ 7-ந் உ என்றிருப்பதை 1969-ம் ஆல் தை மீ 7-ந் உ எனத்திருத்திக் கொள்ளக் கொருகிறோம்.

### ஒரு விண்ணப்பம்

''இந்துசாதனம்'' தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளின் சந்தாதாரரைத் தங்கள் சந்தாப்பணத்தை சிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றோம், மனேஜர்.